பக்கங்கள்:08

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 04 சனிக்கிழமை 20.09.2025 கதிர் 314

## தேசிய சைபர் பாதுகாப்பு உத்தி அறிமுகம்

டிஜிட்டல் பொருளாதார மாற்றத் திட்டத்தில் ஒரு தனித்துவமான வாய்ப்பாக, இலங்கை கணினி அவசரகால பதிலளிப்பு குழு, டிஜிட்டல் பொருளாதார அமைச்சகத்துடன் இணைந்து, உலக வங்கியின் தொழில்நுட்ப உதவியுடன், அனைத்து குடிமக்களுக்கும் பாதுகாப்பான, நம்பகமான மற்றும் உள்ளடக்கிய டிஜிட்டல் சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்கும் நோக்கில், இலங்கையின் தேசிய சைபர் பாதுகாப்பு உத்தி 2025-2029 அறிமுகப்படுத்தியுள்ளது.

சைபர் பாதுகாப்பிற்கு தேவையான சட்ட மற்றும் நிர்வாக கட்டமைப்பை உருவாக்குதல், சைபர் பாதுகாப்பு அறிவு மற்றும் திறன்களைக் கொண்ட ஒரு பணியாளர் குழுவை உருவாக்குதல், சைபர் பாதுகாப்பு குறித்த பொதுமக்கள் மற்றும் பள்ளி மாணவர்களின் அறிவு மற்றும் அணுகுமுறைகளை வளர்த்தல், அரசு நிறுவனங்களில் சைபர் பாதுகாப்பு தயார்நிலையை மேம்படுத்துதல், இலங்கை நிறுவனத்தின் திறனை மேம்படுத்துதல், முக்கியமான டிஜிட்டல் உள்கட்டமைப்பைப் பராமரிக்கும் நிறுவனங்களைப் பாதுகாத்தல் மற்றும் பாதுகாப்பான சைபர்வெளியை உருவாக்க பல்வேறு தரப்பினருடன் ஒத்துழைப்பை உருவாக்குதல் ஆகியவற்றை இந்த உத்தி நோக்கமாகக் கொண்டுள்ளது.

தேசிய சைபர் பாதுகாப்பு செயல்பாட்டு மையம், குடிவரவு மற்றும் குடியகல்வுத் துறை, மோட்டார் போக்குவரத்துத் துறை மற்றும் உள்நாட்டு வருவாய்த் துறை உள்ளிட்ட முக்கியமான டிஜிட்டல் உள்கட்டமைப்பைப் பராமரிக்கும் 37 நிறுவனங்களை 24 மணி நேரமும் கண்காணித்து, அவற்றின் மீதான சைபர் தாக்குதல்களை அடையாளம் காணும் பணியில் ஈடுபடும். சைபர் அச்சுறுத்தல்கள், பாதிப்புகள் மற்றும் ஊடுருவல்களைத் தொடர்ந்து கண்காணித்து, பொருத்தமான பங்குதாரர்களுக்கு ☞2

## இந்திய - இலங்கை உறவு வரலாற்று ரீதியில் உச்சம்

### உயராணையர் சந்தோஷ் ஜா பெருமிதம்

**இலங்கைக்குத் தேவையான நேரங்களில் இந்தியா வழங்கிய உதவிகள், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகள் வரலாற்றுச் சிறப்பு மிக்க உச்சத்தில் இருப்பதை உறுதிப்படுத்தியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ள இந்திய உயராணையர் சந்தோஷ் ஜா, இரு நாடுகளும் இயற்கையான நண்பர்கள் மாத்திரமின்றி வரலாற்று நாகரிகத்தின் இரட்டையர்கள் என்றும் தெரிவித்துள்ளார்.**



**இந்தியாவின் 79ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு இலங்கை - இந்திய சங்கத்தினால் அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த** ☞2

## டிஜிட்டல் மயமாக்கல் இலங்கையை சமூக மற்றும் பொருளாதார ரீதியில் புதிய நிலையை நோக்கி உயர்த்தும்

### அரசுத் தலைவர் அநுரகுமார தெரிவிப்பு

நாட்டை பொருளாதார ரீதியாக முன்னோக்கி கொண்டு செல்வதற்கு அனைத்துத் துறைகளிலும் செயல்திறன் மற்றும் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்வது அவசியம். ஆளும்தரப்பின் டிஜிட்டல் மயமாக்கல் திட்டம் இலங்கையை பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் புதிய நிலைக்கு உயர்த்தும் ஒரு திட்டமாகும் என அரசுத் தலைவர் அநுரகுமார ☞3

## உக்ரேன் நாட்டின் சகபாடியுடன் அயலுறவு பிரதி அமைச்சர் பேச்சு

பிரதி அயலுறவுத்துறை மற்றும் வெளிநாட்டுவேலைவாய்ப்பு அமைச்சர் அருண் ஹேமச்சந்திர, மற்றும் உக்ரேன் பிரதி அயலுறவுத்துறை அமைச்சரும் யுனெஸ்கோவிற்கான உக்ரேன் தேசிய ஆணைக்குழுவின் தலைவருமான மரியானா பெட்சாவுடன் நேற்று முன்தினம் வியாழக்கிழமை தொலைபேசியில் முக்கிய விடயங்கள் குறித்து உரையாடியுள்ளார்.

இலங்கை மற்றும் உக்ரேன் ஆகிய இரு நாடுகளுக்கும் ☞2

## மின்சார சபையில் 23,000 பேரில் வேலைகள் பாதுகாப்பற்றுள்ளன

### எதிர்க் கட்சித் தலைவர் சஜித் விமர்சனம்

அரச சேவையை வலுப்படுத்துவோம், அரச ஊழியர்களைப் பாதுகாப்போம் என வழங்கிய வாக்குறுதிகளை நம்பி, பெரும்பான்மையான அரச ஊழியர்கள் தற்போதைய ஆளும்தரப்பிற்கு வாக்களித்த போதிலும், இன்று மின்சார சபையில் 23,000 பேரின் வேலைகள் பாதுகாப்பற்ற நிலையில் காணப்படுகின்றன என ☞3

இனி இது ரகசியம் அல்ல!

என்.பி.பி. ஆட்சிக்கு வந்தது முதல் சமூக அமைப்புக்கள், இளைஞர் கழகங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், மீனவர் சங்கங்கள் என்று எல்லாவற்றையும் ☞2

### சொத்து விவரங்கள் வெளியானதும்

## ஜேவிபியினரின் ஏமாற்று தெளிவாகியிருக்கின்றது

### நளின் பண்டார எம்.பி. சுட்டிக்காட்டு

அரசியல்வாதிகளின் சொத்து விவரம் வெளியிடப்பட்ட பின்னர், ஜேவிபியினர் எந்தளவிற்கு மக்களை ஏமாற்றியிருக்கின்றனர் என்பது தெளிவாகியிருக்கின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலவரம் தொடர்பில் கருத்துர் வெளியிடும் போது இதனைத் தெரிவித்த அவர், மேலும் தெரிவித்ததாவது:

நான் அரசியலுக்கு வர முன்னர் கோடிகளில் காணப்பட்ட வருமானம், அரசியலுக்குள் பிரவேசித்த பின்னர் வங்கிக் கடனில் செல்கிறது. ஆனால் ஆளுந்தரப்பினருக்கு உண்ண உணவும் உடுத்த ஆடையும் இன்றி இருந்த காலம் மாறி தற்போது அவர்கள் தனவந்தர்களாகவுள்ளனர். இது இன்று சமூகத்தில் பெரும் கேள்வியாகவுள்ளது. ☞2

## அரசின் செலவுகள் 2026இல் அதிகரிப்பு

2026 நிதி ஆண்டுக்கான வரவு, செலவுத் திட்டத்தில் அரச செலவீனமாக 4 லட்சத்து 43 ஆயிரத்து 435 கோடியே 64 லட்சத்து 68 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. 2025 ஆம் ஆண்டுக்கான வரவு, செலவுத் திட்டத்தில் செலவீனமாக 4 லட்சத்து 21 ஆயிரத்து 824 கோடியே 80 லட்சத்து 18 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டிருந்த நிலையில் 2026 ஆம் ஆண்டுக்கான செலவீனம் பல்வேறு காரணிகளை அடிப்படையாகக் கொண்டு 21 ஆயிரத்து 610 கோடியே 84 லட்சத்து 50 ☞3

## மன்னார் மக்கள் நேற்று கொழும்பில் ஆர்ப்பாட்டம்

இரு வெளிநாட்டு தனியார் நிறுவனங்களுக்கு மன்னாரில் இல்மனைட் கனிமவளங்களை அகழ ஆளும்தரப்பு அனுமதி அளித்தமைக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்தும், ஆளும்தரப்பால் முன்மொழியப்பட்டுள்ள காற்றாலை மின் உற்பத்தி திட்டத்தை நிறுத்துமாறு வலியுறுத்தியும் மன்னார் மக்கள் கொழும்பில் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

இலங்கை வரைபடத்திலிருந்து மன்னார் தீவை அகற்றும் வகையில் ஆளும்தரப்பின் அனுமதியுடன் கனிமவள அகழ்வு இடம்பெறபோவதாகவும் இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்கள் குற்றஞ்சாட்டியிருந்தனர்.

மன்னாரில் இல்மனைட் கனிமவள அகழ்வுக்கு அனுமதியளித்தமை, ஆளும்தரப்பால் முன்மொழியப்பட்டுள்ள காற்றாலை மின் உற்பத்தி திட்டத்தை இரத்து செய்தல் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்னிறுத்தி நேற்று வெள்ளிக்கிழமை மன்னார் மக்கள் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். இதில் மன்னார் மக்கள் குழு, பொது மக்கள் பேரவை, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மத்திய நிலையம் ஆகியன ☞2

### மின்சார சேவையாளர்களை அச்சுறுத்த முன்

## அரச தலைவர் மக்களிடம் மன்னிப்பு கேட்கவேண்டும்

### சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு

அரசுத் தலைவர் அநுரகுமார உட்பட ஆளும்தரப்பினர் மின்சார சபையின் சேவையாளர்களை அச்சுறுத்துவதற்கு முன்னர் மக்களிடம் மன்னிப்பு கோரி சுமார் 25 ஆண்டு காலமாக தமது மின்சார தொழிற்சங்கத்தினரிடம் சேகரித்த நிதியை அவர்களுக்கு மீண்டும் வழங்க வேண்டும். மின்சாரசபையின் நட்டத்தை மின்பாவனையாளர்கள் மீது சுமத்தும் வகையில் மீண்டும் மின்கட்டணத்தை 7 சதவீதத்தால் அதிகரிக்க ஆளும்தரப்பு உத்தேசித்துள்ளது என ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் கலந்துக்கொண்டதன் பின்னர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை மின்சாரசபையை மறுசீரமைக்கும் ☞3

## இனி இது .....

தன்னுடைய ஆட்களைக் கொண்டு இட்டு நிரப்பி வருவது யாவரும் அறிந்ததே. இது குறித்து எதிர்க் கட்சியினர், குறிப்பாக சஜித் கொஞ்சம் கட்சிப் பார்த்தார். இது ஜனநாயகத்தை அழித்தொழித்து ஒரு கட்சி ஆட்சியை நிறுவுவதற்கான முன்முயற்சி என்று கண்டித்தார். ஆனாலும் என்.பி.பி. தனது முயற்சியைக் கைவிடுவதாக இல்லை.

தெற்கில் இந்த நிலை என்றால், வடக்கில் தன் வசமில்லாத உள்ளூராட்சி சபைகளின் நிர்வாகங்களை, தவிசாளர்களை அரச நிகழ்வுகளிலும் அபிவிருத்தி நிகழ்வுகளிலும் புறக்கணித்து மக்களிடம் தமது கட்சியின் செல்வாக்கை நிலைநிறுத்துவதில் கவனமாக இருக்கின்றது. இந்தப் போக்குக்கு தமிழ் அரசுக் கட்சி ஆங்காங்கே போர்க்கொடி தூக்கி வருகின்றது.

அண்மையில் அம்பாறை மாவட்டம், ஆலையடிவேம்பில் நடந்த தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தைத் தொடர்ந்து நடந்த உள்ளூராட்சி சபையினருடனான கூட்டத்திலும் இந்தப் புறக்கணிப்புத் தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டது. அது குறித்து ஆளும் தரப்புக்குக் கடிதம் எழுதப்படும் என்று கட்சியின் செயலாளர் சுமந்திரன் தெரிவித்திருந்தார். அதேநேரம் இந்த விவகாரம் குறித்து பிரதேச சபையினரே கேள்வி எழுப்பவேண்டும் என்றும் தெரிவித்திருந்தார்.

இதனை அடுத்து வலி. தெற்கு பிரதேசத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடந்தபோது தனக்கான உரிமையை வலி. தெற்கு பிரதேச சபைத் தலைவர் பிரகாஸ், ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் சிறீ பவானந்தராஜாவிடம் கேள்வி எழுப்பினார்.

அந்தக் கூட்டத்திற்காக நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கென கதிரைகள் அடுக்கப்பட்டிருந்தன. ஆனால் எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினர்களும் கூட்டத்திற்கு வந்திருக்கவில்லை. அதனால் அந்தக் கதிரைகள் ஆட்களின்றி வெற்றுக் கதிரைகளாக நின்றிருந்தன. நாடாளுமன்ற உறுப்பினர்களின் கதிரைகளுக்கு அடுத்து, முன்வரிசையிலேயே பிரதேச சபைத் தவிசாளருக்கு இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. இதனைச் சுட்டிக்காட்டிய பிரகாஸ், இது எந்த வகையில் நியாயம் என்று கேட்டார்?

அரசுத் தலைவருக்கு அடுத்ததாக, இந்தப் பிரதேசத்தில் நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டிருக்கக்கூடிய ஒரே நபரான, மக்களின் நேரடி வாக்குகள் மூலம் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதியான எனக்கு தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்றத்திற்குத் தெரிவானவர்களுக்கு அடுத்து இடம் ஒதுக்கப்படுவது எந்த விதத்தில் நியாயம் என்று கேள்வி எழுப்பினார். அதுமட்டுமன்றி, தெற்கில் நடக்கும் ஒரு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பிரதேச சபைத் தலைவருக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருக்கு அருகில் இடம் ஒதுக்கப்படுகிறது, ஆனால் இங்கு அப்படிச் செய்யப்படவில்லையே ஏன்? அந்தப் பிரதேச சபைத் தலைவர் என்.பி.பியைச் சேர்ந்தவர் என்பதாலா? என்றும் கேள்வி எழுப்பினார்.

அது சுற்றறிக்கையின் அடிப்படையில் பதவி நிலைகளின்படி இடம் ஒதுக்கப்படுகின்றது என்ற கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய சிறீ பவானந்தராஜா சமாளிப்பதற்கு முயன்றார். அதனால் சிறிய வாக்குவாதம் ஏற்பட்டது. அதன் உச்சத்தில் எனக்குப் பக்கத்தில் பிரதேச சபைத் தலைவர் வந்தமர்வதில் எனக்கு எந்தப் பிரச்சினையுமில்லை என்று அவர் ஒரு கருத்தைத் தெரிவித்தார். அத்தோடு தான் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்காக ஒதுக்கப்பட்ட இருக்கையில் இருந்தபடி கூட்டத்தை நடத்தக்கூடத் தயார் எனவும் குத்தல் கதைவிட்டார். அந்தக் குத்தல் கதையைப் பொருட்படுத்தாத பிரகாஸ் நீங்கள் கூறியபடியே நான் உங்கள் அருகே வந்து அமர்கின்றேன் என்று தெரிவித்துவிட்டுப் போய் மேடையில், ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருக்கு அருகே போடப்பட்டிருந்த இருக்கையில் அமர்ந்து கொண்டார்.

தெற்குச் சிங்கள அரசுகள் எப்போது தமிழர்களுக்கான உரிமைகளைத் தாமாகவே கொடுக்கப்போவதில்லை, நாமாகவே பறித்தெடுத்தால்தான் உண்டு என்பதைத்தான் அந்தச் செயல் ஞாபகப்படுத்தியது. இதற்குப் பழிவாங்கலாக அடுத்த கூட்டத்திற்கு பிரகாஸுக்கு இடம் ஒதுக்கப்படுமா என்பது சந்தேகத்திற்குரியதுதான் என்றாலும், கிடைக்கும் இடங்களில் எல்லாம் தமிழர்கள் தமது உரிமைக்கான போராட்டத்தை முன்னெடுக்காத வரையில் இலங்கையில் தமிழர்களுக்கு எந்த உரிமையும் கிடைக்கப்போவதில்லை.

யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வரைப் போன்று ஒதுங்கி இருந்தால் எதுவும் கிடைக்கப்போவதில்லை, முயன்று பறித்தால்தான் உண்டு.

..........................................

ரெலோவின் மத்திய குழுக் கூட்டம் இன்று திருகோணமலையில் நடக்கிறது. கடந்த அரசுத் தலைவர் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் ஆகியவற்றில் ரெலோவுக்குள் ஏற்பட்ட பிளவுகள் மேலும் விரிவாகி இன்னும் வலுப்பெற்றுள்ளதால் இன்றைய கூட்டத்தில் உறுப்பினர்கள் பலர் பங்குபற்றமாட்டார்கள் என்று தெரிகிறது. குறிப்பாக கிழக்கில் முன்னாள் மாகாண சபை உறுப்பினரான பிரசன்னா கலந்துகொள்ளமாட்டார் என்று தெரிகிறது. அதேபோன்று யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மற்றொரு மத்திய குழு உறுப்பினரும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ள மாட்டார் என்று தெரிகிறது.

கட்சியின் தலைமைப் பதவியில் உள்ளவர்கள் மீது ஏற்பட்டுள்ள அதிருப்தியே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது. கட்சித் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோர் கட்சியை இதுவரை அழித்தது போதும், இனிமேலாவது புதியவர்களுக்கு வழி விடப்படவேண்டும் என்பது அவர்களின் கோரிக்கை. கூட்டத்திற்குப் போகாத பலர் தவிர, கூட்டத்திற்குச் செல்லும் பலரிடமும் இதே கோரிக்கை உள்ளது. நீண்ட காலத்திற்குப் பின்னர் இந்தக் கூட்டம் நடப்பதால், அரசுத் தலைவர் தேர்தலின்போதும், நாடாளுமன்றத் தேர்தலின் போதும் கட்சியின் பெயரில் கோடிக் கணக்கில் பெறப்பட்டதாகக் கட்சியினரே குற்றஞ்சாட்டும் பணம் தொடர்பில் இந்தக் கூட்டத்தில் அதிகளவில் கேள்விகள் எழுப்பப்படும் என்று தெரிகிறது.

மாகாண சபைத் தேர்தல் ஒன்று அடுத்த ஆண்டில் வந்தால் அதனை எதிர்கொள்வது குறித்துக் கலந்துரையாடுவதும் இந்தக் கூட்டத்தின் முக்கிய நோக்கங்களுள் ஒன்று என்று சொல்லப்பட்டது. ஆனால், அப்படித் தேர்தல் நடந்தால் ரெலோவின் சார்பிலோ அது அங்கம் வகிக்கும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி சார்பிலோ அது அங்கம் வகிக்கும் தமிழ்த் தேசியப் பேரவை சார்பிலோ போட்டியிடப் போவதில்லை என்பதில் கட்சியின் தலைமைக் குழு உறுப்பினர்கள் பலரே உறுதியான உள்ளனர் என்று உறுதியாக அறியமுடிகிறது. அது தொடர்பான கலந்துரையாடல்களில் தமிழ் அரசுக் கட்சி உட்பட வேறு தரப்புக்களுடன் அவர்கள் ஏற்கனவே தொடங்கிவிட்டார்கள் என்றும் அறிய முடிகிறது.

ஆனால், இங்கே ட்விஸ்ட் என்னவென்றால் பேரவை, கூட்டணி எல்லாவற்றையும் கழற்றிவிட்டு ரெலோவே தமிழ் அரசின் காலடியில் வந்து விழுமா இல்லையா என்பதுதான். பொறுத்திருந்து பார்ப்போம்..

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருடாந்த இரவு விருந்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே உயராணையர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டார். இந்த இரவு விருந்தில் இந்திய மற்றும் இலங்கை வர்த்தகச் சமூகத்தினர், ஊடகவியலாளர்கள், முதலீட்டாளர்கள் உள்ளிட்ட இலங்கை இந்திய சங்கத்தின் முக்கிய உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் மேலும் உரையாற்றிய இந்திய உயராணையர் சந்தோஷ் ஜா, இந்தியாவின் 'அயல்நாடுகளுக்கு முன்னுரிமை' கொள்கையையும் 'மாகாசாகர்' திட்டத்தையும் எடுத்துக்காட்டினார். அத்துடன், இலங்கைக்குத் தேவையான நேரங்களில் இந்தியா வழங்கிய உதவிகள் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகள் வரலாற்றுச் சிறப்புமிக்க உச்சத்தில் இருப்பதை உறுதிப்படுத்தியுள்ளதாகக் குறிப்பிட்டார்.

2024 டிசம்பரில் அரசுத் தலைவர் அநுரகுமார திசாநாயக்கவின் இந்திய பயணத்தையும், 2025 ஏப்ரலில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை பயணத்தையும் அவர் நினைவு கூர்ந்தார்.

இந்த பயணங்கள், ஏழு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், புதிய திட்டங்கள், மற்றும் இணைப்பு, வலுசக்தி பாதுகாப்பு, டிஜிட்டல் உருமாற்றம், திறன் மேம்பாடு, மற்றும் பிராந்திய நிலைத்தன்மை போன்ற முக்கிய துறைகளில் முன்னேற்றத்திற்கு வழிவகுத்தன என்றும் உயராணையர் குறிப்பிட்டார். இந்தியாவும் இலங்கையும் இயற்கையான நண்பர்கள் என்றும் மற்றும் வரலாற்று நாகரிகத்தின் இரட்டையர்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்

வேகமாக வளர்ந்து வரும் ஒரு முக்கிய பொருளாதார நாடான இந்தியா 2038 ஆம் ஆண்டளவில் உலகின் இரண்டாவது பெரிய பொருளாதாரமாக உருவெடுக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. எனவே, ஏற்றுமதிக்கான ஒரு சந்தை, விநியோகச் சங்கிலி கூட்டாளர் மற்றும் முதலீட்டின் ஆதாரமாக, இலங்கையும் இந்த வளர்ச்சியிலிருந்து பயனடையலாம் என்று அவர் அழைப்பு விடுத்தார்.

அத்துடன், வீடமைப்பு, சுகாதாரம், தொடருந்துகள், கல்வி, டிஜிட்டல் மயமாக்கல், மற்றும் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி போன்ற துறைகளில் உள்ள திட்டங்களை உள்ளடக்கிய, அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய, 800 மில்லியன் டொலருக்கும் அதிகமான மானியங்கள் உட்பட இலங்கையில் இந்தியாவின் ஏறக்குறைய 7 பில்லியன் டொலர் மேம்பாட்டுத் திட்டங்களை அவர் மீண்டும் உறுதிப்படுத்தினார்.

அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ உரையாற்றுகையில், இந்தியாவின் துரித பொருளாதார வளர்ச்சி குறித்து இலங்கை பெருமை கொள்வதாகவும், அதன் வளர்ச்சியை இலங்கை எதிர்பார்க்கிறது என்றும் குறிப்பிட்டார். உலகின் மூன்றாவது பெரிய பொருளாதாரமாக வளர்ந்து வரும் ஒரு நாட்டிற்கு அருகில் இருப்பதற்கான வாய்ப்புகளை இலங்கை ஆளும்தரப்பு பயன்படுத்திக் கொள்ள முயல்கிறது. அத்துடன், இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் அமைதி மற்றும் நிலைத்தன்மையை உறுதிப்படுத்தவும் பாடுபடுகிறது என்றும் அவர் வலியுறுத்தினார்.

மேலும், மருந்து மற்றும் மருத்துவ உபகரண உற்பத்தி போன்ற துறைகள் உட்பட இலங்கையில் முதலீடு செய்யுமாறு இந்திய நிறுவனங்களுக்கு அவர் அழைப்பு விடுத்தார். அத்துடன், இலங்கை - இந்திய சங்கம் நிறுவப்பட்டது முதல் இருநாடுகளுக்கும் இடையே சமூக மற்றும் கலாச்சார உறவுகளை வலுப்படுத்துவதிலும் மேம்படுத்துவதிலும் இலங்கை - இந்திய சங்கம் ஆற்றிவரும் பங்கையும் அவர் பாராட்டியுள்ளார்.

## உக்ரேன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடையிலான இருதரப்பு மற்றும் பல்தரப்பு ஒத்துழைப்புகள் குறித்து இருவருக்குமிடையில் கருத்துக்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டதாக அயலுறவுத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. அண்மையில் ஐக்கிய நாடுகள் சபையில் ஒருவருக்கொருவர் அளித்த ஆதரவு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடியதாக அயலுறவுத்துறை, அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

இலங்கையில் அண்மைக் காலமாக இடம்பெற்ற முன்னேற்றங்கள் குறித்து பிரதி அமைச்சர் ஹேமச்சந்திர உக்ரேன் பிரதி அயலுறவுத்துறை அமைச்சருக்கு எடுத்துரைத்ததுடன், இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்துவதில் இலங்கையின் ஆர்வத்தையும் வெளிப்படுத்தியுள்ளார்.

நெருங்கிய உறவுகளை வளர்ப்பதற்கும், பரஸ்பர நலன் சார்ந்த துறைகளில் ஒத்துழைப்புக்கான வாய்ப்புகளை ஆராய்வதற்கும் பகிரப்பட்ட உறுதிப்பாட்டை இந்த கலந்துரையாடல் எடுத்துக்காட்டுவதாக அயலுறவுத்துறை அமைச்சின் அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளது.

## தேசிய சைபர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உடனடியாகத் தெரிவிப்பதன் மூலம் அரசாங்க சைபர் அமைப்புகள் மற்றும் பொது டிஜிட்டல் சேவைகளைப் பாதுகாப்பதற்கு இது பொறுப்பாகும்.

இந்த மையம் இலங்கையின் டிஜிட்டல் அமைப்பின் பாதுகாப்பு மற்றும் மீள்தன்மையை மேம்படுத்தும், சைபர் மற்றும் பாதுகாப்பு அச்சுறுத்தல்களுக்கு முன்கூட்டியே எச்சரிக்கை மற்றும் விரைவான பதிலை வழங்கும், மற்றும் பாதுகாப்பான டிஜிட்டல் செயல்பாடுகளைப் பராமரிக்க அரசு நிறுவனங்கள் மற்றும் தனியார் துறையை ஆதரித்து கல்வி கற்பிக்கும். செயல்பாட்டு தொடர்ச்சி, விரைவான பதில், குறைந்த செலவு, இணக்கம் மற்றும் நம்பிக்கை ஆகியவை நன்மைகளில் அடங்கும். தேசிய சைபர் பாதுகாப்பு உத்தி (2025-2029) டிஜிட்டல் பொருளாதார விவகாரங்களுக்கான பிரதி அமைச்சர் எரங்க வீரரத்னவினால் அரசுத் தலைவர்க்க வழங்கப்பட்டது.

## ஜேவிபியினரின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாமும் எமது சொத்துக்களை வெளிப்படுத்தியிருக்கின்றோம். சொத்து விவரம் வெளியிடப்பட்ட பின்னர் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களின் சொத்து விவரங்களுக்கு அப்பால் ஜே.வி.பி. கடந்த காலங்களில் எந்தளவுக்குப் பொய் கூறி மக்களை ஏமாற்றியிருக்கிறது என்பது தற்போது தெளிவாகியிருக்கிறது. 2020இல் கோட்டாபய ராஜபக்சவிடம் ஏமாற்றமடைந்த மக்கள் தற்போது அநுரகுமாரவிடம் ஏமாற்றமடைந்துள்ளனர். ஆனாலும் மக்கள் யதார்த்தத்தை புரிந்து கொள்ள மாட்டார்கள்.

2004ஆம் ஆண்டிலிருந்து மக்கள் தவறான தீர்மானங்களையே எடுத்திருக்கின்றனர். இதற்கு முன்னரும் நாம் சொத்து விவரங்களை வெளியிட்டிருக்கின்றோம். ஆனால் அது இந்தளவுக்கு பேசப்படவில்லை. ஜே.வி.பியினர் கடந்த காலங்களில் கூறிய பொய்கள், தான் இந்த விடயத்தை இந்தளவுக்கு பேசுபொருளாக்கியிருக்கின்றன. சொத்து விவரங்களைச் சமர்ப்பித்தால் மாத்திரம் போதாது. அவற்றின் மூலங்களையும் வெளியிடவேண்டும்.

ஐக்கிய தேசிய கட்சியின் சம்மேளனத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது. ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார அதில் பங்கேற்ற தீர்மானித்துள்ளார். கட்சி உறுப்புரிமைக்கும் இதற்கும் எந்தத் தொடர்பும் இல்லை. நாம் ஏற்கனவே ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்புரிமையைப் பெற்றுள்ளோம். ஒரே சந்தர்ப்பத்தில் இருவேறு கட்சிகளில் அங்கத்துவம் வகிக்க முடியாது. எவ்வாறிருப்பினும் இவ்விரு கட்சிகளும் ஒன்றிணையவேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாகவுள்ளோம்.

இது குறித்த பேச்சு இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. அந்தப் பேச்சு வெற்றிகரமாக நிறைவடையும் என்று நம்புகின்றோம். இது ஓரிரு நாட்களில் நிறைவடையும் விடயமல்ல. இனிவரும் தேர்தல்களில் எவ்வாறு களமிறங்குவது என்பது குறித்து தேர்தல் காலத்தில் தீர்மானிக்கப்படும். ஆளும்தரப்பு மாகாணசபைத் தேர்தலை அறிவிக்கும் வரை காத்திருக்கின்றோம் என்றார்.

## மன்னார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைகோர்த்திருந்தன.

போராட்டத்திற்காக மன்னாரிலிருந்து 6 பேருந்துகளில் மக்கள் வருகைத் தந்திருந்ததுடன் கொழும்பில் உள்ள அரசுத் தலைவர் செயலகத்துக்கு முன்பாக நேற்று பிற்பகல் 2 மணியளவில் மணியளவில் நூற்றுக்கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்கள் ஒன்றுகூடி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மணலில் உள்ள இல்மனைட் என்னும் கனிமவளத்துக்கு உலகளவில் கேள்வி நிலவி வரும் நிலையில், அரசாங்கத்தின் அனுமதியுடன் மேற்கொள்ளப்பட உள்ள கனிமவள அகழ்வு பணி காரணமாக மன்னார் தீவுக்குப் பெரும் சேதம் ஏற்படுமென மக்கள் விசனம் வெளியிட்டனர்.

மேலும் மன்னாரில் உள்ள மக்கள் மாத்திரமே மன்னாருக்கு உரிமை கோர முடியும், எம்மக்களுக்கு மன்னார் தீவு வேண்டும், மன்னார் தீவு எமது வாழ்க்கை அதை எம்மிடமிருந்து பறிக்காதீர், உங்களின் சுயலாபத்திற்காக எமது நிலத்தை விற்பனை செய்யாதீர் போன்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளை ஏந்தியும் கோசமிடும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தனர்.

இந்நிலையில் போராட்டக்காரர்கள் முன்னோக்கிச் செல்வதை தடுப்பதற்காக பெருமளவான பொலிஸாரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

காலைக்கதிர் Kalaikkathir

## டிஜிட்டல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திசாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்ற தேசிய சைபர் பாதுகாப்பு உத்தி (2025-2029) தொடக்க விழா மற்றும் தேசிய சைபர் பாதுகாப்பு செயல்பாட்டு மையத்தின் ஆரம்பநிகழ்வில்கலந்துகொண்டு உரையாற்றும்போது இதனைத்தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தொழில்நுட்பம் மற்றும் அறிவியலின் சாதனைகளை விரைவாக உள்வாங்க கூடிய ஒரு அரசு விரைவில் வளர்ச்சியின் உச்சத்தை நோக்கி நகரும். இந்த தேசிய சைபர் பாதுகாப்பு அமைப்பு நமது நாட்டின் தேசிய பாதுகாப்பு, தேசிய பொருளாதாரம் மற்றும்குடிமக்களின்வாழ்க்கை முறையைப் பாதுகாப்பதில் மிக முக்கிய பங்கு வகிக்கும்.

'நாங்கள் இன்று ஒரு சிறப்புப் பணியைத் தொடங்குகிறோம். நாங்கள் ஒரு கட்டடத்தையோ அல்லது அலுவலகத்தையோ திறக்கவில்லை. டிஜிட்டல் மயமாக்கலை நோக்கி வலுவான பயணத்தை மேற்கொள்ள வேண்டுமென்றால், பாதுகாப்பு, வலிமை மற்றும் நம்பகத்தன்மை அவசியம். இன்று நாம் திறப்பது அதற்குத் தேவையான சைபர் பாதுகாப்பு அமைப்பைத்தான். இது நமது நாட்டின் டிஜிட்டல் பொருளாதார பயணத்தில் மிக முக்கியமான தருணம்.

நாம் அரசியல் ரீதியாகப் பார்த்தாலும் சரி, உலகப் பொருளாதாரத்தின் பாதையைப் பார்த்தாலும் சரி, முக்கிய காரணி என்னவென்றால், தொழில்நுட்பம் மற்றும் அறிவியலால் அடையப்பட்ட சாதனைகளை விரைவாக உள்வாங்கக்கூடிய நாடுகள் மிக விரைவாக வளர்ச்சியின் விளிம்பை நோக்கி நகர்கின்றன என்பதுதான். தொழில்நுட்பம் மற்றும் அறிவியலின் முன்னேற்றத்தை விரைவாக அடைய முடியாத நாடுகள் இதேபோல் மேலும் மேலும் தள்ளிவிடப்படுகின்றன. இலங்கையில் நாம் எதிர்கொள்ளும் நெருக்கடி அங்குதான் இருக்கிறது என்று நான் நினைக்கிறேன்.

பல கருத்துக்கள் 16 மற்றும் 17 ஆம் நூற்றாண்டுகளில் உருவாக்கப்பட்டன என்பதை நாம் அனைவரும் அறிவோம். இருப்பினும், கருத்தியல் ரீதியாக கட்டமைக்கப்பட்ட இந்தப் பல விடயங்கள் இருபதாம் நூற்றாண்டில் மட்டுமே யதார்த்தமாகின. சுகாதாரத் துறை சாதனைகள், ஜனநாயக ஆட்சியாளர்களுக்கான தேர்தல், அரசியல் வெறும் அரச அதிகாரத்தால் நிர்வகிக்கப்பட்ட உலகில் மக்களின் பங்கேற்பு, அதேபோல் புதிய வழியிலான மனித உறவுகள், இவை அனைத்தும் 20 ஆம் நூற்றாண்டில் நடைமுறை நிலைக்கு கொண்டு வரப்பட்டன. அதன்படி, இந்த டிஜிட்டல் மயமாக்கப்பட்ட உலகம் 20 ஆம் நூற்றாண்டின் இறுதியில் இருந்து ஒரு முக்கிய பங்கை வகிக்கத் தொடங்கியது.

நாம் தேர்வு செய்யக்கூடிய இரண்டு பாதைகள் உள்ளன. முதலாவது, இந்த டிஜிட்டல் மயமாக்கலை மிக விரைவாக ஒருங்கிணைத்து அதை ஒரு நடைமுறை யதார்த்தமாக மாற்றுவது. பின்னர் நாம் முன்னேறிய அரசுகளுக்கு இணையாகச் செல்லமுடியும். இந்த தொழில்நுட்ப சாதனைகளை முறையாகப் பெறத் தவறுவதன் மூலம், நாம் உலகத்திலிருந்து நம்மை மேலும் தூர விலக்கிக் கொள்கிறோம். இந்த நவீன தொழில்நுட்பத்தால் பெறப்பட்ட அறிவு, புதிய கருவிகள், புதிய அமைப்புகள் நம் மாநிலத்திற்கு விரைவாகக் கொண்டு வரப்பட வேண்டும். அதனால்தான் டிஜிட்டல் மயமாக்கல் நமது அரசாங்கத்தின் ஒரு முக்கிய திட்டமாக அடையாளம் காணப்பட்டுள்ளது. அறிஞர்கள் மற்றும் நிபுணர்கள் அதற்காக மிகுந்த அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருகின்றனர். 2026 ஆம் ஆண்டு முதல் சகல அரச நிர்வாக கட்டமைப்பும் டிஜிட்டல் மயப்படுத்தக்கூடும் என்றார்.

## மின்சார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

மிஹிந்தலை தேர்தல் தொகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற 'கிராமத்திற்கு கிராமம், வீட்டுக்கு வீடு' எதிர்க்கட்சித் தலைவர் நடமாடும் சேவைத் திட்டத்தின் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அதிகாரத்தில் இல்லாதபோது, மின்சார சபை ஊழியர்களின் வேலைகளைப் பாதுகாக்க உயிர் தியாகம் செய்யத் தயாராக இருந்த தொழிற்சங்கத் தலைவர்கள், தற்போது அதிகாரத்திற்கு வந்த பிறகு, மின்சார சபை ஊழியர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதை விடுத்து, ஆட்சியைப் பாதுகாப்பதில் முனைப்புக் காட்டுகின்றனர் என்று எதிர்க்கட்சித் தலைவர் கூறினார்.

அப்போது பெருமையாகப் பேசிய இந்தத் தலைவர்கள், இன்று அனைத்தையும் மறந்துவிட்டு, ஆட்சியைப் பாதுகாக்க கடும் பிரயத்தனம் எடுத்து வருகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆளும்தரப்பு இன்று பொதுமக்களை அச்சுறுத்திவருகிறதுஎன்று குறிப்பிட்ட எதிர்க்கட்சி தலைவர், விவசாயிகள், தொழில்முனைவோர், அரசஊழியர்கள் மற்றும் நடுத்தரவர்க்கத்தினர் என அனைவரையும் ஆளும்தரப்பு மறந்துவிட்டதாகக் குற்றம்சாட்டினார். ஆளும்தரப்பைப் பாதுகாக்க கொலை செய்யவும், உயிர் தியாகம் செய்யவும் தயாராக இருப்பதாக அவர்கள் அச்சுறுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

மக்களாட்சியின் மீதான இத்தகைய தாக்குதல்களை எதிர்கொண்டு மௌனமாக இருப்பதா அல்லது விவசாயிகள், பொதுமக்கள் மற்றும் அரச ஊழியர்களைப் பாதுகாக்க வீதியில் இறங்குவதா என்பதை மக்கள் சிந்திக்க வேண்டும், என்று அவர் அழைப்பு விடுத்தார். இத்தகைய ஜனநாயகப் போராட்டத்திற்குத் தலைமைதாங்கத் தான் தயாராக இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார். மக்களுக்குத் தரமான உரமோ, உர மானியங்களோ கிடைப்பதில்லை என்றும், களைக்கொல்லிகள் கூட தரம் குறைந்தவையாக இருப்பதாகவும் அவர் கூறினார். உயர்தர விதைகள், விவசாய உபகரணங்கள் மற்றும் அவற்றின் விலை அதிகரிப்பு ஆகியவற்றால் விவசாயிகள் சிரமப்படுவதாகவும், காட்டு யானைகளால் ஏற்படும் பயிர் சேதங்களுக்குக்கூட காப்பீட்டு இழப்பீட்டு முறை இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த மக்களுக்காகப் போராடி அவர்களின் உரிமைகளைப் பெற்றுத் தரத் தன்னால் முடிந்த அனைத்தையும் செய்வதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் உறுதியளித்தார்.

## அரச தலைவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யோசனையை 2002 ஆம் ஆண்டு அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கொண்டு வந்தார். இலங்கை மின்சார சபையை மறுசீரமைக்கும் யோசனைக்கு ஜேவிபி தான் தொடக்கத்தில் இருந்து கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தியது.

மின்சார சபையை பாதுகாக்க வேண்டும் என்று குறிப்பிட்டுக்கொண்டு ஜேவிபி மின்சார சபை தொழிற்சங்க உறுப்பினர்களிடமிருந்து ஒவ்வொரு மாதமும் தலா 200 ரூபாவை பெற்றுக்கொண்டு அதனை தமது கட்சியின் வங்கி கணக்கில் வைப்பிட்டது.

2015 ஆம் ஆண்டு அப்போதைய அரசுத் தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு கடும் அழுத்தம் கொடுத்து ஜேவிபி தமது 6000 ஆதரவாளர்களை இலங்கை மின்சார சபையில் இணைத்துக் கொண்டது. மக்கள் விடுதலை முன்னணி ஒவ்வொரு மாதமும் தம்மிடமிருந்து 5000 ரூபா அறவிட்டதாக அவர்கள் குற்றஞ்சாட்டுகிறார்கள்.

அரசுத் தலைவர் அநுரகுமார உட்பட ஆளும்தரப்பு மின்சார சபையின் சேவையாளர்களை அச்சுறுத்துவதற்கு முன்னர் மக்களிடம் மன்னிப்பு கோரி சுமார் 25 ஆண்டு காலமாக தமது மின்சார தொழிற்சங்கத்தினரிடம் சேகரித்த நிதியை அவர்களுக்கு மீண்டும் வழங்க வேண்டும்.

இலங்கை மின்சார சபையின் நட்டத்தை மின்பாவனையாளர்கள் மீது சுமத்தும் வகையில் மீண்டும் மின்கட்டணத்தை 7 சதவீதத்தால் அதிகரிக்க ஆளும்தரப்பு உத்தேசித்துள்ளது. 75 இலட்ச மின்பாவனையாளர்கள் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்த வேண்டும்.

விலைமனுகோரலின்போது முறையற்ற வகையில் செயற்பட்டு அரசுக்கு சுமார் 85 இலட்சம் ரூபாய் நட்டஈடு ஏற்படுத்திய நபரையே வலுசக்தி அமைச்சராக அரசுத் தலைவர் நியமித்துள்ளார். இவ்வாறான நிலையில் எவ்வாறு ஊழலற்ற நாட்டை உருவாக்க முடியும் என்றார்.

# காங்கேசன் துறைமுக அபிவிருத்திக்கு அமைச்சர் விமல் அடியோடு நிராகரிப்பு

### அது வணிக துறையாக வளரும் சாத்தியமில்லை எனவும் தெரிவிப்பு

யாழ். காங்கேசன்துறை துறைமுகத்தை வணிகத் துறைமுகமாக மாற்ற முடியாது எனப் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் தெரிவித்திருக்கிறார்.

யாழ். மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற விசேட அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார். நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர், யாழ். காங்கேசன்துறை துறைமுகத்தை வணிகத் துறைமுகமாக அபிவிருத்தி செய்ய மாட்டோம். ஏனெனில் வணிகத் துறைமுகமாக அபிவிருத்தி செய்வதற்குப் பொருத்தமான காரணிகள் ஏதுவாக இல்லாத நிலையில் அம்பாந்தோட்டை மற்றும் ஒலிவில் துறைமுகங்கள் போன்று காங்கேசன்துறை துறைமுகத்தையும் மாற்ற எமது அரசு விரும்பவில்லை. அதுமட்டுமல்லாது காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கு இந்தியா வழங்கிய நிதியும் போதாது' - என்றார்.

அதற்கு, 'இந்தியாவிடம் பேசி நாங்கள் மேலதிக நிதியைப் பெற்றுத் தருகின்றோம். துறைமுகத்தை அபிவிருத்தி செய்யுங்கள்' - என்று கூறியபோது, பதில் வழங்கிய அமைச்சர், 'இந்தியாவிடம் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பல தடவைகள் பேசியுள்ளார். நாங்களும் பேசியுள்ளோம். ஆனால், வணிகத் துறைமுகமாக அதை மாற்ற முடியாது' - என்றார். இதன்போது குறுக்கிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன், 'நீங்கள் ஆய்வு செய்யாமல் பொருத்தமில்லை எவ்வாறு எனக் கூறமுடியும்?' - என்று கேள்வி எழுப்பினார். இதற்குப் பதிலளித்த அமைச்சர், 'ஆய்வு அறிக்கை இருக்கின்றது நாடாளுமன்றத்தில் உங்களுக்கு வழங்குகின்றேன்' - என்றார்.

'யாழ்ப்பாணம் பலாலி விமான நிலையப் பாதுகாப்புக்காக சுவீகரிக்கப்பட்ட பொதுமக்களின் காணிகளை எப்போது விடுவிப்பீர்கள்? ஏற்கனவே சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கு ஏன் நட்டஈடு வழங்கப்படவில்லை?' என்று சிறீதரன் கேள்வி எழுப்பினார். 'மக்களின் காணிகள் மக்களுக்கே என்பது எமது அரசின் நிலைப்பாடு. யாழ். பலாலி விமான நிலையப் பாதுகாப்புக்காகச் சுவீகரித்த காணிவிடுவிப்பு தொடர்பில் தற்போது கூறமுடியாது. பாதுகாப்புத் தரப்பினருடன் கலந்துரையாடியே பதில் வழங்க முடியும்' - என்றார்.

## அரசின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆயிரம் ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

2025ஆம் ஆண்டு வரவு, செலவுத் திட்டத்தைக் காட்டிலும் 2026ஆம் ஆண்டு வரவு, செலவுத் திட்டத்தின் பாதுகாப்பு அமைச்சின் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் விடயதானங்களுக்கு அதிகளவில் நிதி ஒதுக்கிடப்பட்டுள்ளது.

அரசசெலவீனத்துக்கான நிதி ஒதுக்கீடுகளில் பாதுகாப்பு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுக்களுக்காக 64,800 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. 2025ஆம் ஆண்டு பாதுகாப்பு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் விடயதானங்களுக்கு 61,744கோடியே 50இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டிருந்த நிலையில் 2026 ஆம் ஆண்டுக்காக 3,055 கோடியே 50 இலட்சம் ரூபா மேலதிகமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அரசுத் தலைவர் அநுரகுமார வசமுள்ள பாதுகாப்பு அமைச்சு, நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, டிஜிட்டல் பொருளாதார அமைச்சு ஆகியவற்றுக்கும் அரசுத் தலைவர்க்கான செலவீனமுமாக மொத்தம் 1,11,715 கோடியே 9,980,000 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை 2025 ஆம் ஆண்டுக்கு அரசுத் தலைவர் செலவீனமாக 299,29,80,000 ரூபா ஒதுக்கப்பட்டிருந்த நிலையில் 2026 ஆம் ஆண்டுக்கான அரசுத் தலைவர் செலவீனமாக 11.377,980,000 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இது 2025 ஆம் ஆண்டு அரசுத்தலைவர் செலவீனத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகையை விடவும் 8,385,000,000 ரூபா அதிகமாகும்.

பிரதமரின் விடயதானங்களுக்குரிய செலவினமாக 2025 ஆம் ஆண்டுக்கு 1,170,000,000 ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் 2026 ஆம் ஆண்டுக்கான பிரதமருக்கான செலவீனமாக 9,75,000,000 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இது 2025 ஆம் ஆண்டு பிரதமரின் செலவீனத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகையை விடவும் 1,95,000,000 ரூபா குறைவானதாகும் .

அதேவேளை 2025 ஆம் ஆண்டு, சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு, கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு, பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு உள்ளிட்ட இன்னும் சில அமைச்சுகளுக்கான ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகளை விடவும் 2026ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

2026 ஆம் ஆண்டுக்கான வரவு ,செலவுத்திட்ட முன்மொழிவுஎதிர்வரும் 26ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையிலேயே 2026 ஆம் ஆண்டுக்கான வரவு, செலவுத்திட்ட நிதி ஒதுக்கீடு விபரங்கள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளன.

அதற்கமைய ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடுகள் வருமாறு

புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சுக்கு 14,500,000,000 ரூபாவும், பௌத்த அலுவல்கள் திணைக்களம் 1,350,000,000 ரூபாவும், முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் 2,04,000,000 ரூபாவும், கிறிஸ்தவ சமய அலுவல்கள் திணைக்களம் 1,78,000,000 ரூபாவும், இந்து சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் 2,85,000,000 ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது

நிதி திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கு 6,34,782,000,000 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது 2025 ஆம் ஆண்டு இந்த அமைச்சுக்கு 7,14,177,500,000 ரூபா ஒதுக்கப்பட்டிருந்த நிலையில் 2026 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டில் 7,9,395,500,000 ரூபா குறைக்கப்பட்டுள்ளது

பாதுகாப்பு அமைச்சுக்கு 4,55,000,000,000 ரூபாவும், நீதி மற்றும் தேசிய ஒற்றுமைப்பாட்டு அமைச்சுக்கு 5,8,500,000,000 ரூபாவும் சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சுக்கு 5,54,999,998,000 ரூபாவும், வெளிநாட்டலுவல்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சுக்கு 2,3,000,000,000 ரூபாவும், வர்த்தக வாணிப உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சுக்கு 2,700,000,000 ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், போக்குவரத்து நெடுஞ்சாலைகள் துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சுக்கு 4,46,000,000,000 ரூபாவும், கமத்தொழில், கால்நடை வளங்கள் காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சுக்கு 2,21, 300,000,000 ரூபாவும் வலுசக்தி அமைச்சுக்கு 23,100,000,000 ரூபாவும், நகர அபிவிருத்தி நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சுக்கு 1,03,500,000,000 ரூபாவும், கிராமிய அபிவிருத்தி சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சுக்கு 3,8,600,000,000 ரூபாவும், கல்வி உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சுக்கு 3,01,000,000,000 ரூபாவும், பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு

தொடர்ச்சி 6ம் பக்கம்....

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மின்சார சபை மறுசீரமைப்பு; பேச்சு ஊடக நிலையான தீர்வு

இலங்கை மின்சார சபையின் மறுசீரமைப்பு தொடர்பாக அரசாங்கமும் தொழிலாளர்களும் மோதிக்கொண்டிருக்கும் நிலை தீவிரமடைந்துள்ளது. மறுசீரமைப்பு தேவை என்பதில் எவருக்கும் ஐயம் இல்லை. உலகளாவிய போட்டி சூழலில், நவீன தொழில்நுட்ப முன்னேற்றங்களுடனும், அதிகப்படியான தேவைகளுடனும் மின்சார துறையை ஒத்திசைத்து நடத்த அரசாங்கம் திட்டமிடுவது அவசியமே. ஆனால், அந்தத் திட்டமிடல் தொழிலாளர்களின் உரிமைகளையும் வாழ்வாதாரங்களையும் புறக்கணித்துவிட்டால், அது ஒரு அபிவிருத்தித் திட்டமாக இல்லாமல், ஒரு சமூக அநீதியாகவே மாறிவிடும்.

தற்போது நிலவும் சூழ்நிலையில், தொழிலாளர்கள் வெளிப்படையாகக் கூறுகிறார்கள்: புதிய அமைப்பில் அவர்களின் வேலை வாய்ப்புகள், ஊதிய சலுகைகள், ஓய்வூதியங்கள் ஆகியவை பாதிக்கப்படுகின்றன என்ற கவலை. இதற்கு அரசின் பதில், "விருப்பமில்லையெனில் வெளியேறலாம், நிவாரணம் வழங்கப்படும்" என்பதாக உள்ளது. இவ்வகையான தள்ளுபடி முறையால் பிரச்சினைத் தீர்வதில்லை. தொழிலாளர்களின் மனக்குமுறலையும் எதிர்பார்ப்புகளையும் கேட்டு, அனைவரும் நம்பும் தீர்வை உருவாக்க வேண்டும்.

மறுசீரமைப்பு தொடர்பான அனைத்து தகவல்களும் இதுவரை தெளிவாக வெளிப்படவில்லை. எந்த வகை நிறுவனங்களாக பிரிக்கப்பட உள்ளது? வேலை வாய்ப்பு நிலைத்தன்மை எப்படி உறுதி செய்யப்படும்? ஓய்வூதியங்கள் மற்றும் பணிநிலைகள் எந்த அளவில் பாதுகாக்கப்படும்? என்ற கேள்விகளுக்கு அரசு நேரடி பதில் வழங்கவில்லை. தகவல் மறைவு நிலவும்போது, தொழிலாளர்களின் சந்தேகங்களும் போராட்டங்களும் பெருகுவதே இயல்பு.

தொழிலாளர்களின் "work-to-rule" போராட்டம், "sick leave" நடவடிக்கைகள் ஆகியவை நாட்டின் மின் விநியோகத்தில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இதன் விளைவாக பொதுமக்களே அநீதி அனுபவிக்க நேரிடும் அபாயம் உள்ளது. எனவே, இந்த பிரச்சினை நீடிக்கக் கூடாது. உடனடியாக அரசாங்கமும் தொழிற்சங்கங்களும் ஒரே மேடையில் அமர்ந்து, பேச்சுவழியாக ஒரு நடுநிலைத் தீர்வை நோக்கிச் செல்ல வேண்டும்.

அரசாங்கம் உணரவேண்டியது, தொழிலாளர்கள் மின்சார சபையின் முதுகெலும்பு என்பதே. அவர்கள் மீது அழுத்தம் கொடுத்து, "வெளியேறுங்கள்" எனக் கூறுவது ஒரு தீர்வு அல்ல. பணி நிலை, ஊதியத் தரம், ஓய்வூதிய உரிமை, சட்டரீதியான பாதுகாப்பு ஆகியவை மறுசீரமைப்புக்குப் பின் உறுதியாக இருக்கும் என்பதே தொழிலாளர்களின் அடிப்படை கோரிக்கை. இதனை நிறைவேற்றாமல் திட்டத்தை திணிப்பது ஜனநாயகத்திற்கும் தொழிலாளர் உரிமைகளுக்கும் எதிரான செயல்.

மறுசீரமைப்பு என்ற பெயரில் சமூகநீதி புறக்கணிக்கப்படக் கூடாது. மக்கள் பணம் செலுத்தி கட்டப்படும் மின் சேவையை திறம்படவும் நியாயமாகவும் வழங்கும் நோக்கம் அரசாங்கத்தின் முதல் கடமை. அதற்காகவே தொழிலாளர்களும் மக்கள் நலனும் ஒன்றிணைய வேண்டும். உரிய ஆலோசனைகள், வெளிப்படையான தகவல்கள் மற்றும் சட்ட ரீதியான உத்தரவாதங்கள் தரப்பட்டால், தொழிலாளர்களும் இந்த மாற்றங்களை ஏற்றுக் கொள்ளத் தயங்கமாட்டார்கள்.

இப்பிரச்சினையில் அரசாங்கம் எடுத்துக் கொள்ளவேண்டிய வழிமுறை தண்டனையோ அச்சுறுத்தலோ அல்ல. உண்மையான தீர்வு பேச்சுவழிதான். அரசும் தொழிற்சங்கங்களும் ஒன்றிணைந்து, எதிர்காலத்தில் மின்சார துறையை சீரமைக்கும் திட்டம் எப்படி அனைவருக்கும் நன்மை தரும் என்பதை உறுதி செய்ய வேண்டும்.

மின்சார சபையின் மறுசீரமைப்பு என்பது காலத்தின் தேவையாக இருக்கலாம். ஆனால் அது மக்களின் நலனுக்கும் தொழிலாளர்களின் நம்பிக்கைக்கும் ஒத்திசைவாக அமையாவிட்டால், அதன் வெற்றி எப்போதும் சந்தேகத்திலேயே இருக்கும். இன்று அரசாங்கம் காட்டவேண்டியது தன்னம்பிக்கை அல்ல, பேச்சுவழி தீர்வுக்கான அறிவும் பொறுப்பும் ஆகும்.

## வெளிநாட்டுத் தொழில்துறையினை ஒழுங்குபடுத்த விரைவில் நடவடிக்கை

### பிரதி அமைச்சர் தெரிவிப்பு

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் சட்டத்தில் திருத்தம் மேற்கொண்டு அல்லது தேவை என்றால் புதிய சட்டம் ஒன்றை கொண்டுவந்தாவது வெளிநாட்டுதொழில்துறையின் ஒழுங்குபடுத்தலுக்குத் தேவையான நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்வோம் என அயலுறவுத்துறை, வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமசந்திர தெரிவித்தார்.

வெளிநாட்டுதொழில்வாய்ப்புதொடர்பாககிடைக்கப் பெறும் முறைப்பாடுகளை தேடிப்பார்த்தல் மற்றும் அவற்றுக்கு விரைவாக தீர்வுகளை பெற்றுக்கொடுப்பதற்காக பொலிஸ் அதிகாரிகளைக்கொண்ட விசேட விசாரணை பிரிவொன்றை திறந்து வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வெளிநாட்டு தொழில் மோசடிகளை தடுப்பது மற்றும் முறைப்பாடுகளுக்காக விரைவாக தீர்வுகளை பெற்றுக்கொடுத்து புலம்பயர் சமூகத்துக்கு நிவாரணங்களை வழங்கும் நோக்கத்திலே பொலிஸ் அதிகாரிகள் அங்கிய விசாரணை பிரிவு அமைக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களை பார்க்கும்போது கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் அதிகரித்துள்ளன. வெளிநாட்டு தொழில் மோசடி செய்பவர்கள் பல்வேறு தந்திரங்களை பயன்படுத்துகின்றனர். சில குழுக்கள் பணியகத்தில் பதிவு செய்யாமல் முகவர் நிறுவனமாக செயற்பட்டு மோசடி செய்து வருகின்றன.

இன்னும் சிலர் பணியகத்தில் பதிவு செய்த முகவர் நிறுவனமாக மோசடி செய்கின்றனர். இது மாத்திரமல்ல, தற்போது வருகை விசா முறையில், அதேபோன்று ஆலாசனை வழங்கும் நிறுவனம் என்ற பெயரில் மறைந்திருந்து செயற்படுகின்றனர். அதனால் இவற்றில் மாட்டிக்கொள்பவர்கள் முறைப்பாடு செய்கின்றனர்.

கடந்த காலங்களில் ஒருசில அரசியல்வாதிகள் காரணமாக இந்த நிறுவனத்தின் நற்பெயர் சீரழிந்திருந்தது. அதனால் மக்களுக்கு நம்பிக்கை இல்லாமல் போனது. என்றாலும் தற்போது அந்த நிலைமை முற்றாக மாற்றமடைந்து வருகிறது. 1985ஆம் ஆண்டு இந்த பணியகம் ஆரம்பிக்கப்பட்டது. இந்த நிறுவனம் வெளிநாட்டு தொழில் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை என்பதுதான் எமது திட்டம்.

இந்த இடத்துக்கு வருபவர்களில் வெளிநாட்டு தொழில் வாய்ப்பொன்றை எதிர்பாரத்து வரும் சிலர் வந்தாலும், பொதுவாக ஏதாவது அவர்களின் முறைப்பாட்டை தெரிவிக்க, கவலையை கூறுவதற்கே வருகிறார்கள். இவ்வாறு வருபவர்களின் முறைப்பாடுகளுக்கு வெற்றிகரமாகவும் விரைவாகவும் தீர்வுகளை பெற்றுக்கொடுப்பதே எமது நடவடிக்கையாகும்.

அத்துடன் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள அல்லது தேவை என்றால் புதிய சட்டம் ஒன்றை கொண்டுவந்து வெளிநாட்டு தொழில் துறையின் ஒழுங்குபடுத்தலுக்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என்றார்.

## ஆதர் சி கிளார்க்க நிறுவனத்தின் செயற்கைக் கோள் ஏவப்பட்டது

அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் கீழ் உள்ள ஆர்தர் சி. கிளார்க் மேம்பட்ட தொழில்நுட்ப நிறுவனத்தின் கீழ் இலங்கை பொறியியல் தொழில்நுட்பத் துறையால் உருவாக்கப்பட்ட 'BIRDS-X DRAGONFLY' செயற்கைக்கோள், நேற்று பிற்பகல் 2.15 மணிக்கு சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து வெற்றிகரமாக ஏவப்பட்டது.

இந்த செயற்கைக்கோள் ஓகஸ்ட் 24 அன்று நாசாவால் ஏவப்பட்ட 'SPX33' ராக்கெட்டில் சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு (ISS) ஏவப்பட்டது. 'BIRDS-X DRAGONFLY' விண்கலத்தின் மறு சுற்றுப்பாதை ஆர்தர் சி. கிளார்க் மேம்பட்ட தொழில்நுட்ப நிறுவனத்தில் நேரடியாக ஒளிபரப்பப்பட்டது, மேலும் இந்த நிகழ்வின் முதன்மை விருந்தினராக அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் செயலாளர் மொஹமட் நவி கலந்து கொண்டார்.

2019 ஆம் ஆண்டில் இலங்கையின் முதல் செயற்கைக்கோளான "ராவணன்-1" ஏவப்பட்டதைத் தொடர்ந்து, 2022 ஆம் ஆண்டில், 05 சர்வதேச பங்காளிகளை உள்ளடக்கிய தொழில்நுட்ப ஒத்துழைப்பு திட்டத்தின் கீழ், மூன்றாவது செயற்கைக்கோளான "BIRDS-X டிராகன்ஃபிளை" ஏவப்பட்டது, இலங்கையின் விண்வெளி தொழில்நுட்ப வளர்ச்சியில் மற்றொரு குறிப்பிடத்தக்க சாதனையைக் குறிக்கிறது.

இந்தத் திட்டத்தின் குறிப்பிடத்தக்க அம்சங்களில் ஒன்று, இலங்கை எந்த மூலதனச் செலவையும் செய்யவில்லை. இது ஜப்பானில் உள்ள ஆர்தர் சி. கிளார்க் நிறுவனம் மற்றும் கியூஷு தொழில்நுட்ப நிறுவனம் மூலம், ஜப்பான் விண்வெளி ஆய்வு நிறுவனம் மற்றும் டிஜிட்டல் ஆராய்ச்சி மையம் போன்ற சர்வதேச நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் விண்வெளி தொழில்நுட்ப ஒத்துழைப்பு திட்டமாக செயல்படுத்தப்பட்டுள்ளது.

வெளிநாட்டுத் தரப்பின் ஒப்புதலைப் பெற்ற பிறகு, ஆர்தர் சி. கிளார்க் நிறுவனத்தின் முன்னாள் இயக்குநர் ஜெனரல், பொறியாளர் (பேராசிரியர்) சேன் பனவானே, முன்னாள் துணை இயக்குநர் ஜெனரல் (தொழில்நுட்ப விவகாரங்கள்) பொறியாளர் கமானி எதிரிவீர மற்றும் பொறியியல் துறையின் இயக்குநர், இந்தத் திட்டத்தைத் தொடங்க உள்நாட்டில் நியமிக்கப்பட்ட கவிரா ஜெயவர்தன, நிறுவனத்தின் ஆராய்ச்சி பொறியாளர்களான தரிந்து டயரேனா, கவிரா சம்பே, உதிதா யாயே மற்றும் திலினா விதேபண்டாரா ஆகியோரின் முயற்சியுடன் இது தயாரிக்கப்பட்டது.

'BIRDS-X DRAGONFLY' ஆராய்ச்சி வாகனம் மூன்று முதன்மை விண்வெளி ஆய்வுப் பணிகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. இவற்றில் விண்கலத்தில் பயன்படுத்த புதிதாக வடிவமைக்கப்பட்ட குறைந்த விலை செயற்கைக்கோள் துணை அமைப்பு, ஒரு செயற்கைக்கோள் ஆராய்ச்சி பணி மற்றும் விண்வெளி நிலைமைகளின் கீழ் சோதனை செய்வதற்காக விண்கலத்தின் முதன்மை துணை அமைப்புகளைக் கொண்ட முழு அமைப்பான BUS அமைப்பு ஆகியவை அடங்கும்.

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பொலிஸாரைக் கொண்ட புலனாய்வுப் பிரிவு

வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொடர்பான முறைப்பாடுகளுக்கு உடனடித் தீர்வுகளை வழங்குவதற்காக, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தலைமை அலுவலகத்தில் பொலிஸ் அதிகாரிகளைக் கொண்ட விசேட புலனாய்வுப் பிரிவு நிறுவப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பிரிவில், பிரதான பொலிஸ் பரிசோதகர் உட்பட 16 பொலிஸ் அதிகாரிகள் இடம்பெற்றுள்ளனர்.

1985ஆம் ஆண்டு 'வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஒழுங்குமுறை அதிகார சபை' என்ற பெயரில் நிறுவப்பட்ட இந்த நிறுவனம், வெளிநாட்டு வேலைவாய்ப்பு தேடுபவர்களின் முறைப்பாடுகளுக்கு பயனுள்ள மற்றும் உடனடி தீர்வுகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடிகளைத் தடுப்பது, முறைப்பாடுகளுக்கு உடனடி தீர்வுகளை வழங்குவது மற்றும் புலம்பெயர்ந்த சமூகத்திற்கு நிவாரணம் வழங்குவதை இலக்காகக் கொண்டு இந்தப் பிரிவு நிறுவப்பட்டதாக, வெளியுறவு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர தெரிவித்தார்.

மேலும், புதிய ஆளும்தரப்பு ஆட்சிக்கு வந்த பின்னர் இந்தப் பிரிவு விரைவாக நிறுவப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

காலைக்கதிர் Kalaikkathir

# ரூ. 2 கோடி பெறுமதியான தங்கத்துடன் விமானப் படை அதிகாரி நேற்றுக் கைது

2 கோடி ரூபா பெறுமதியான தங்க பிஸ்கட்டுக்களுடன் விமான நிலையத்தில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த விமானபடை புலனாய்வு பிரிவு அதிகாரி கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தின் பயணிகள் வருகை முனையத்தில் வைத்து நேற்று அதிகாலை 2 மணியளவில், விமான நிலையத்தினுள் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த விமானப் புலனாய்வு பிரிவு அதிகாரி கைது செய்யப்பட்டுள்ளார்.

விமான நிலையத்திலிருந்து வெளியேற முற்பட்ட நிலையில் சந்தேகநபரை சுங்கப் போதைப்பொருள் கட்டுப்பாட்டுப்பிரிவு அதிகாரிகள் சோதனையிட்டுள்ளனர்.

இதன்போது சந்தேகநபரின் இடுப்பு பகுதிக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 40 தங்க பிஸ்கட்டுக்கள் கைப்பற்றப்பட்டதாக சுங்கப் பிரிவு தெரிவித்துள்ளது. கைப்பற்றப்பட்ட தங்கபிஸ்கட்டுகள் 550 கிராம் எடைக் கொண்டவை எனவும் சுமார் 2 கோடி ரூபா பெறுமதி மிக்கவை எனவும் சுங்கத் திணைக்கள அதிகாரிகளால் மதிப்பிடப்பட்டுள்ளது.

கைதான நபர் தங்க பிஸ்கட்டுகளை செலோடேப் கொண்டு பொதியிட்டு அவற்றை உடற்பகுதியில் வைத்து மறைத்து கொண்டு வந்துள்ளார். சந்தேகநபர் 37 வயதுடையவர். மினுவாங்கொடை பகுதியைச் சேர்ந்தவர். விமான படைப்பிரிவில் 17 வருடங்களாக கடமையாற்றிய வருபவர் எனவும் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் குறித்த தங்க பிஸ்கட்டுகளை விமான நிலையத்தினுள் பிறிதொரு நபரிடமிருந்து பெற்றுக் கொண்டு அவற்றை வெளியே கொண்டு வர உதவியிருக்கலாமென சுங்கப் பிரிவு அதிகாரிகள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். மேலும் கைதான சந்தேகநபரை தடுத்து வைத்து விமான நிலைய சுங்கப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# பெருந்தோட்டத் தொழிலாளர்கள் வேதனம்: ஒக்டோபருக்குள் இணக்கம் வரவேண்டும்

### நீதிமன்றம் உத்தரவு

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வேதனம் தொடர்பில் ஒக்டோபர் மாதத்துக்குள் இணக்கப்பாட்டுக்கு வர வேண்டுமென உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதோடு நவம்பர் 20ஆம் திகதிக்கு முன்னர் வேதன அறிவிப்பை ஆளும்தரப்பு செய்ய வேண்டும் என்றும் அறிவித்துள்ளது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான நியாயமான வேதனம் தொடர்ச்சியாக மறுக்கப்பட்டு வரும் நிலையில் இலங்கை தொழிலாளர் செங்கொடி சங்கத்தினரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு தொடர்பில் நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருந்த இலங்கை செங்கொடிச் சங்கத்தின் ஆலோசகர், மேனகா கந்தசாமி ஊடகங்களுக்கு தெரிவிக்கையில்,

பெருந்தோட்டத்தொழிலாளர்களின் உழைப்பும் அதன் மதிப்பும் எப்போதும் குறைத்தே மதிப்பிடப்படுகின்றது. பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்குக் கிடைக்கும் 1,350 ரூபா என்பது அவர்களின் வாழ்க்கை செலவுக்கு உகந்ததொரு வேதனம் இல்லையென அவர் குறிப்பிட்டார்.

அத்தோடு, பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வேதனம் குறித்து ஆளும்தரப்பு உடனடியாக தோட்ட நிறுவனங்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி, எதிர்வரும் ஒக்டோபர் மாதத்துக்குள் வேதனம் தொடர்பில் ஒரு இணக்கப்பாட்டுக்கு வர வேண்டும் எனவும், எதிர்வரும் நவம்பர் 20ஆம் திகதிக்கு முன்னர் பெருந்தோட்டத் தொழிலாளர்களில் வேதன உயர்வை ஆளும்தரப்பு அறிவிக்க வேண்டும் எனவும் நீதிமன்றம் உத்தரவிட்டதாக அவர் தெரிவித்தார்.

மேலும், தொழிலாளர்களின் வேதன உயர்வுக்கு பதில் கிடைக்கும் வரை தொழிலாளர்கள் தொடர்ந்தும் குரல் கொடுத்துக் கொண்டே இருப்பார்கள் எனவும் இலங்கை செங்கொடிச் சங்கத்தின் ஆலோசகர், மேனகா கந்தசாமி தெரிவித்தார்.

# சாதாரண தரப் பரீட்சைக்கு இந்த மாதம் விண்ணப்பம்

2025 (2026) கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் செப்டம்பர் 18 முதல் ஒக்டோபர் 9, 2025 வரை இணையவழியில் கோரப்படும் என கல்வி அமைச்சு விசேட அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

அதன்படி, பாடசாலை விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களைப் பாடசாலை அதிபர்கள் மூலமாகவும், தனியார் விண்ணப்பதாரர்கள் இணையவழியாகவும் சமர்ப்பிக்க வேண்டும்.

தனியார் விண்ணப்பதாரர்கள் க.பொ.த. (சா.த.) பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்போது தங்கள் தேசிய அடையாள அட்டையைப் பயன்படுத்த வேண்டும்.

தேசிய அடையாள அட்டை இல்லாத தனியார் விண்ணப்பதாரர்கள், தங்கள் பாதுகாவலர் (தாய் அல்லது தந்தை) இன் தேசிய அடையாள அட்டையைப் பயன்படுத்தி விண்ணப்பங்களைப் பதிவு செய்து சமர்ப்பிக்க வேண்டும். இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் அதிகாரப்பூர்வ வலைத்தளங்களான www.doenets.lk அல்லது www.onlineexams.gov.lk/eic இல் உள்ள வழிமுறைகளைப் பின்பற்றி விண்ணப்பங்களைச் சரியாகச் சமர்ப்பிக்க வேண்டும் என அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.



## வைத்தியசாலையை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

5,96,000,000,000ரூபாவும் பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சுக்கு 18,000,000,000ரூபாவும், கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சுக்கு 11,500,000,000 ரூபாவும் கடற்றொழில் நீரியல் வளங்கள் மற்றும் கடல் வளங்கள் அமைச்சுக்கு 10,600,000,000 ரூபாவும், சுற்றாடல் அமைச்சுக்கு 18,300,000,000 ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சுக்கு 16,400,000,000ரூபாவும், டிஜிட்டல் பொருளாதார அமைச்சுக்கு 16,000,000,000 ரூபாவும், பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சுக்கு 193,000,000,000ரூபாவும், தொழில் அமைச்சுக்கு 6,400,000,000 ரூபாவும், இளைஞர் அலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சுக்கு 13,500,000,000ரூபாவும் விஞ்ஞான மற்றும் தொழிநுட்ப அமைச்சுக்கு 6,000,000,000 ரூபாவும் என்ற அடிப்படையில் நிதி ஒதுக்கிடப்பட்டுள்ளது.

இதேவேளை 2026 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தின் இரண்டாவது மதிப்பீடு (வரவு, செலவுத்திட்ட உரை) நிதி அமைச்சர் என்ற ரீதியில் அரசுத் தலைவர்யினால் எதிர்வரும் நவம்பர் 7ஆம் திகதி நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும். அதனைத் தொடர்ந்து நவம்பர் 8ஆம் திகதி முதல் டிசம்பர் 5ஆம் திகதி வரை விவாதத்தை நடத்துவதற்கும் நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

நவம்பர் 8ஆம் திகதி முதல் நவம்பர் 14ஆம் திகதி வரை 6 நாட்கள் இரண்டாவது மதிப்பீடு விவாதம் நடத்தப்படுவதுடன் 14ஆம் திகதி மாலை 6 மணிக்கு இரண்டாவது மதிப்பீடுக்கான வாக்கெடுப்பு நடத்தப்படும்.

இதன் பின்னர் நவம்பர் 15ஆம் திகதி முதல் டிசம்பர் 5ஆம் திகதி வரை 17 நாட்கள் குழுநிலை விவாதத்தை நடத்துவதற்குத் டிசம்பர் 5ஆம் திகதி மாலை 6 மணிக்கு மூன்றாவது மதிப்பீடுக்கான வாக்கெடுப்பு நடத்தப்படும் இந்தக் காலப்பகுதியில் அரசாங்க விடுமுறைகள் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகள் தவிர சனிக்கிழமை உள்ளிட்ட ஏனைய அனைத்து நாட்களிலும் வரவு,செலவுத்திட்ட விவாதம் இடம்பெறும்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

பாதாள உலகத் தலைவர்

# சம்பத் சில்வாவின் பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கோரி ரிட் மனு

இந்தோனேசியாவில் கைது செய்யப்பட்டு தற்போது தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள நிலங்க சம்பத் சில்வா எனப்படும் பாணந்துறை நிலங்கவின் பாதுகாப்பை உறுதி செய்ய குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு உத்தரவிடக் கோரி தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுவை 26 ஆம் திகதி விசாரணை செய்வதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சந்தேகநபரின் தாயார் தாக்கல் செய்த மனு, நேற்றையதினம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி ரோஹந்த அபேசூரிய மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் அமர்வு முன் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மனுதாரரின் சட்டத்தரணி மற்றும் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் நரல் ஷனில்குலரத்ன ஆகியோர் முன்வைத்த வாதங்களைக் கருத்தில் கொண்ட நீதிபதிகள் ஆயம், விசாரணையை 26 ஆம் திகதி நடத்த உத்தரவிட்டது.

மனுவில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர், பொலிஸ் மாஅதிபர், சட்ட மாஅதிபர் மற்றும் பலர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் காவலில் உள்ள தனது மகனின் பாதுகாப்பை உறுதி செய்ய பிரதிவாதிகளுக்கு உத்தரவிடுமாறு மனுதாரர் கோரியுள்ளார்.

மேலும், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவால் வெளியிடப்பட்ட வழிகாட்டுதல்களின்படி, காவலில் உள்ள சந்தேகநபர்களை எவ்வாறு கையாள்வது என்பது குறித்து பிரதிவாதிகள் செயல்பட உத்தரவிட வேண்டும் என்றும் மனுதாரர் கோரியுள்ளார்.




வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்
மருதம் பசுமை நகர்
Marutham Green City
நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km
உள்ளக வசதிகள்
நூலகம்
நீச்சல் தடாகம்
உணவகம்
சிறுவர் பூங்கா
விளையாட்டுத்திடல்
மீன்பிடி குளம்
A – 2 பரப்பு வீட்டுக்காணியுடன் 2 பரப்பு வயல்க்காணி
B – 2 பரப்பு வீட்டுக்காணியும் 2 பரப்பு வயல்க்காணியும் (தனித்தனியாக)
C – 2 பரப்பு வீட்டுக்காணி பிரதான வீதியுடன்
0777 43 55 57


JDr
JDR CARE HOME & MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான பூரண வசதிகளுடனான பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane, Jaffna


புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
KNOWLEDGE IS POWER
January 25 FREE
February 5
தரம் 6 தொடக்கம்
தரம் 11 வரை
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT


Study MBBS in China
SLMC APPROVED
Dalian Medical University
YOUR PATH TO WORLD CLASS MBBS
JDR HEALTH CARE PVT(LTD)
SEPTEMBER 2025
ADMISSION OPEN
CONTACT US FOR ADMISSION
0701348384







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.09.2025இல் வெளியிடப்பெற்றது